REPORTING SECT
(Council)

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, இதுபோன்ற தமிழ்ப் புலவர்கள் வேறு யாருக்கும் வேறு எங்கும் கோயில்கள் இருக்கின்றனவா ? அப்படியுள்ள கோயில்களில் அவர்களது பாடல்கள் எழுதி வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவர் அவர்களே, ஔவை யாருக்கு இன்னொரு இடத்தில் கோயில் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அதற்கான விபரம் இப்போது என்னிடத்தில் இல்லை. இப்படிப்பட்ட கோயில்களை அரசுப் பொறுப்பில் எடுத்துக்கொண்டால்தான், நாம் நினைக்கிறபடி, தமிழ் மூதாட்டியின் நினைவுகள் நிலைத்து நிற்கும்படி செய்ய முடியும்.

தந்தத்துக்காக யானைகளைக் கொல்லுதல்.

*24 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டின் மலைப்பகுதியில் வாழும் யானைகளை, பிற மாநிலத்தைச் சார்ந்தவர்கள் சட்ட விரோதமாகக் கொன்று, தந்தம் எடுத்துச் செல்கிறார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், கடந்த மூன்று வருடங்களில் இது தொடர்பாக எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) பிறமாநிலத்தவர்களும் குற்றங்களில் ஈடுபட்ட செய்தி அரசுக்குக் கிடைத்துள்ளது.

(இ) நான்கு.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இப்போது யானைகள் எவ்வளவு இருக்கின்றன என்று கணக்கு இருக்கிறதா ? யானைகளைத் தந்தங்களுக்காக கொலை செய்பவர்களைக் கண்டுபிடிக்க தனிக் காவல் பிரிவு ஏற்படுத்துவது உதவியாக இருக்குமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே எவ்வளவு யானைகள் இருக்கின்றன என்பது ஓரளவுக்குக் கணக்கிடப் பட்டிருக்கிறது. ஆனால் அந்த விவரம் இப்போது என்னிடத்திலே இல்லை. இதைப் போன்ற கடுமையான வனக் குற்றங்கள் செய்பவர்களை, குறிப்பாக வன விலங்குகளை பாதுகாப்பிற்காக கொல்வதிலோ, தந்தங்களை எடுக்கின்ற முயற்சியிலோ ஈடுபடுகின்ற குற்றவாளிகளைப் பிடித்து தண்டிப் பதற்காக இப்போது பெரிய முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அதை யொட்டித் தான் ஒரு டி.ஐ.ஜி. தலைமையில் தனிப் போலீஸ் படையே வனத் துறைத் தலைவரின் கீழ் நியமிக்கப்பட்டிருக்கிறது.

Teachers absorbed from Aided Schools.

* 25. *Q.*—Dr. T. R. JANARTHANAM (on behalf of Thiru P. R. Thomas) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that as per G.O. Ms. No. 992, Education, dated 1st June 1978, teachers absorbed from Panchayat Union Schools while upgrading such schools, are eligible to have their services counted for awarding Selection Grade from 1st July 1971 on the basis of percentage ; and

(*b*) if so, the reasons for not extending the same privilege to teachers absorbed from Aided Schools ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) அரசாணை நிலை எண் 992, கல்வி, நாள் 1—6—1978-ல் வெளி யிடப்பட்ட ஆணை பஞ்சாயத்து யூனியன் பள்ளி மற்றும் முன்னாள் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கே பொருந்தும். அவர்கள் முன்பு வெவ்வேறு பஞ்சாயத்து ஒன்றியங்களின் கீழ் பணிபுரிந்திருந்தாலும், அவர்களின் முந்தைய பணி தல நிர்வாகப் பணியாக ஒரே பணியின் கீழ் வருவதோடு பணிமூப்பும் மாவட்ட அடிப்படை யிலேயே இருப்பதாலும் மாவட்டக் கழகப் பணியில் அவர்கள் ஈர்க்கப்பட்ட போது, அவர்களது பணிமூப்பில் எந்த மாற்றமும் ஏற்படாத காரணத்தால்,